1970 மார்ச் 16]

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, வேலை கிடைக்காத நிலைமையும், வாழ்க்கைப் பளுவும் சேர்ந்து, மாணவர்களிடம் அமைதியின்மை ஏற்படக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அது தமிழகத்திலே மட்டும் அல்ல, இந்தியா பூராவும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற நேரத்திலே, தேர்வு என்பது ஒரு தண்டனையாக மாறக் கூடாது என்ற உணர்வு இருக்கும் நேரத்தில், இந்த இரகசியக் குறிப்பேடு முறையைப் புகுத்துவது சரியா? அந்த ஆலோசனையை மேற்கொள்வதுகூட தவறு அல்லவா என்று அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இப்பொழுது இல்லை என்று. அந்தக் கருத்து தெரிவிக்கப்படுகிறதே தவிர அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியே வந்தாலும் அந்தக் கருத்து ஆலோசனைக் குழுவிலே வைத்து விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று. இப்பொழுது அப்படிப்பட்ட திட்டம் எதுவுமில்லை.

ஆஸ்டின்பட்டி ஷயரோக மருத்துவமனை

* 393 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆஸ்டின்பட்டியிலுள்ள ஷயரோக மருத்துவ மனையில் நோயாளிகளை அனுமதிப்பதில் எந்த முறை பின்பற்றப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நோயாளிகளின் காத்திருக்கைப் பட்டியல் வரிசை எண்படி அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மோசமான நிலையிலுள்ள நோயாளிகள் எர்ஸகின் ஆஸ்பத்திரியில் ஷயரோக நோயாளிகளின் பகுதியில் உடனடியாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. மா. இராசாங்கம்: தலைவரவர்களே, இந்த ஆஸ்டின்பட்டியிலுள்ள ஷயரோக மருத்துவ மனையில் வைப்புப் பட்டியலில் ஏராளமான நோயாளிகள் இருப்பதால், அவர்கள் ஆரம்பக்காலத்தில் இடம் கிடைக்காது கடைசியில், கைவிடுகிற கட்டத்தில் இடம் கிடைக்கிறது என்று கூறப்படுகிறது. எனவே அதை விரிவுபடுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டம் ஆஸ்டின்பட்டியில் இப்பொழுது 102 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக அது விளங்குகிறது. அதில் மேற்கொண்டு 60 படுக்கைகள் தருகின்ற ஒரு வரைவுத் திட்டம் தலைமைப் பொறியாளரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அது இயக்குனர் அவர்களுக்கு வந்தபின் அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பார்கள். அதன்மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவரவர்களே, சுமார் 30 லட்சம் மக்கள் இருக்கும் மதுரை மாவட்டத்திற்கு ஒரேயொரு டி.பி. சானடோரியம், ஆஸ்டின் பட்டியில் இருக்கிறது. அதிகமான அளவில், ஆயிரம்பேர்களுக்கு மேல் இருப்பதால், டி.பி. பேஷண்டுகளுக்கு இடம் கிடைக்காமல் வெயிட்டிங் லிஸ்ட்டில்

இருக்கிறார்கள். இந்த நிலைமையில் ஆஸ்டின்பட்டியில் மேற்கொண்டு 60 படுக்கைகள் அதிகப்படுத்துவதால் மட்டும் அது போதுமானதாக இருக்காது. சுமார் 200 படுக்கைகள் கொண்டதாக அதை விஸ்தரிக்க செயற்குறிப்பு உடனடியாகத் தயாரிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உடனடியாக, 30, 30 படுக்கைகள் கொண்ட இரண்டு வார்டுகள் ஏற்படுத்தக்கூடிய அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு இது குறைவுகள்தான் என்றாலும், இருக்கின்ற நிதிநிலையைப் பார்த்து உடனடியாக 60 படுக்கைகள் மேற்கொண்டு தருகின்ற நிலைமை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு, படிப்படியாக ஏற்படுத்த வேண்டும். ஆனால் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை உணர்ந்து, விரைவில் விரிவுபடுத்த முயற்சிக்கப்படுகின்றது. எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் 20 படுக்கைகள் இருந்து வருகின்றன. மோசமான நிலையிலுள்ள நோயாளிகளை உடனடியாகச் சேர்ப்பதற்கு அந்தப் படுக்கைகள்எல்லாம் பயன்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்தக் கொடூரமான தொற்று நோய் இன்றையத்தினம் மேலும் பெருகிக்கொண்டு இருப்பதனால், தாலுக்கா அளவிலே குறைந்தபட்சம், 5 படுக்கைகள் தனியாக ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முதலிலே மாவட்ட மருத்துமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அது வெற்றிகண்ட பிறகு வட்ட மருத்துவ மனைகளில் இந்தப் பிரிவுகளை மேற்கொள்ள முயற்சி செய்யலாம்.

Artificial Limb Centres

* 394 *Q*.—THIRU K. VINAYAKAM :
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :
Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government have sanctioned two sub-Centres of the Artificial Limb Centre in the Government General Hospital; and

(*b*) if so, where they are to be opened?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மதுரை, கோயம்புத்தூர்.

திரு. கே. விநயகம்: நமது சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் இது மாதிரி துவக்குவதற்கு ஏற்பாடு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னை பெரிய மருத்துவ மனையில் ஆர்டிபிஷியல் லிம்பு செண்டர் இருந்துவருகிறது. 1964 லிருந்து இது செயல்பட்டுவருகிறது. அது சிறந்த பலனை அளிக்கின்றது.